www.Padasalai.Net www.CBSEtips.in

H

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

பதிவ எண்: | | | | | | |

நேரம்: 3.00 மணி

## பொதுத் தமிழ்

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளுள் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

14×1=14

1. பொருத்தமான இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்.
   i) முத்து லிங்கம் - யுகத்தின் பாடல் ii) பவணந்தி முனிவர் - நன்னூல்
   iii) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை iv) இந்திரன் - பேச்சு மொழியும்,கவிதை மொழியும்
   அ) ii, iv ஆ) i, ii இ) i, iii ஈ) i, iv
2. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ........... என்பதாகும்.
   அ) தாள் ஆ) நூல் இ) ஓலை ஈ) எழுத்தாணி
3. பொருத்துக :
   அ) தொல்காப்பியம் - சங்க நூல்
   ஆ) திருக்குறள் - பக்தி நூல்
   இ) புறநானூறு - அறநூல்
   ஈ) திருவாசகம் - இலக்கண நூல்
4. உடம்படு மெய்களாக வரும் மெய்யெழுத்துகள் எவை?
   அ) க், ச் ஆ) ர், ழ் இ) ய், வ் ஈ) த், ப்
5. 'குறியீட்டியத்தைப் புரிந்து கொள்ள உதவியவர்
   அ) பாப்லோ நெரூடா ஆ) மல்லார்மே இ) இரசூல்கம்சதோவ் ஈ) வால்ட்விட்மன்
6. திகட சக்கரம் என்ற சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் யார்?
   அ) அ. முத்துலிங்கம் ஆ) வில்வரத்தினம் இ) இந்திரன் ஈ) கா.சிவதம்பி
7. 'நனி இகக்கும்' - இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு
   அ) வினையெச்சம் ஆ) உம்மைத் தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) தொழிற்பெயர்
8. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
9. 'பிரசம்' - என்ற சொல்லின் பொருள்
   அ) பால் ஆ) சோறு இ) பூ ஈ) தேன்
10. தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியவர் யார்?
    அ) இரா. மீனாட்சி ஆ) போதனார் இ) அண்ணாமலையார் ஈ) அழகிய பெரியவன்
11. மண்ணுக்கு வளம் சேர்ப்பன -
    அ) இயற்கை உரங்கள் ஆ) மண்புழு இ) ஊடுபயிர் ஈ) இவை மூன்றும்
12. அழகிய பெரியவனின் இயற்பெயர் யாது?
    அ) சிவராமலிங்கம் ஆ) முத்துலிங்கம் இ) ஜெயமோகன் ஈ) அரவிந்தன்
13. "Earth Environment" - என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க:
    அ) சுற்றுச்சூழல் ஆ) இயற்கைச் சூழல் இ) புவிச்சூழல் ஈ) பசுமைச் சூழல்

Padasalai.Net

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



14. ஒப்புரவு என்பதன் பொருள்

அ) ஊருக்கு உதவுவது ஆ) தொண்டு செய்வது இ) பாதுகாப்பது ஈ) பொருளீட்டுவது

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்:**

### *பிரிவு - I*

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக: 3×2=6**

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

17. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

18. சீர் தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

### *பிரிவு - II*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 2×2=4**

19. ஐந்து வேளாண்மை மந்திரங்களை எழுதுக.

20. 'கோட்டை' என்னும் சொல் - திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

21. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

### *பிரிவு - III*

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக: 7×2=14**

22. உயிர் முதல் - மெய்ம் முதல் - எடுத்துக்காட்டுடன் விவரி.

23. *ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக :*

அ) பிரிந்தோர் ஆ) வருகின்ற

24. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:*

அ) பொதுச்சிறப்பு ஆ) முறையறிந்து

25. *பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரு தொடரில் அமைத்து எழுதுக.*

பொரி, பொறி

26. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க : வைகை*

27. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக :*

கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

28. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*

குமரனை பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள், என் வீட்டிற்கு பக்கத்து வீடு தான் குமரனது வீடு.

29. *பிறமொழிச் சொற்களை தமிழாக்கம் செய்க :*

அ) உத்திரவாதம் ஆ) கோரிக்கை

30. தமிழ் இதழியல் துறையில் முதன் முதலாகக் கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் பாரதி - *விடைக்கேற்ற வினா அமைக்கவும்.*

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - III

### *பிரிவு - I*

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளி (இரண்டு மட்டும்):** **2×4=8**

31. "ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்குணர்ந்தனள் கொல்" - *இடஞ்சுட்டி பொருள் விளக்குக.*

32. விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.

33. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களை எழுதுக.

34. நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

### *பிரிவு - II*

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி:** **2×4=8**

35. மதிப்புக் கூட்டுப் பொருள் என்றால் என்ன?

36. "மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" என்பதனை விவரி.

37. சமணப் பள்ளிகளும் - பெண்கல்வியும் பற்றிக் குறிப்பு வரைக.

38. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டு சக்தி மிக்கது ஏன்?

### *பிரிவு - III*

**எவையேனும் மூன்றனுக்கு விடையளி:** **3×4=12**

39. "நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு" - அலகிட்டு வாய்பாடு கூறுக. **(அல்லது)**
பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் - *இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.*

40. *இலக்கிய நயம் பாராட்டுக : மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)*

ஒன்றிலிருந் தொன்றென்னும் உலக நிலை அறிந்தேன்
    உணர்வுகளின் பிண்டந்தான் உடலென்பதறிந்தேன்
குன்றுகளும் நிலைமாறிக் குன்றுமென அறிந்தேன்
    கொள்கைகளே காட்சிகளின் முகமென்ப தறிந்தேன்
வென்றவரும் சில சமயம் தோற்பவ ரென்றறிந்தேன்
    வெறும் பேச்சில் யாதொன்றும் விளையா தென்றறிந்தேன்

- சுரதா

41. *பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக:*
அ) "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து"
ஆ) காலம் பொன் போன்றது

42. *தமிழாக்கம் தருக:*
1. Culture doesnot make people, people makeculture.
2. Knowledge rules the world.
3. Work while you work and play while you play.
4. Roads were made for journeys not destinations.

43. உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுடன் விளக்குக.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3×6=18**

44. 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

(அல்லது)

தலைவியின் இல்லற பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

45. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் - விவரிக்க.

(அல்லது)

'இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும், இயற்கையோடு இயைந்தே இருந்தன'- கூற்றினை மெய்ப்பிக்க.

46. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

(அல்லது)

யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்த செய்திகளைத் தொகுக்க.

Padasalai.Net

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக :** **4+2 =6**

47. அம்ம வாழி .......... எனத் தொடங்கும் வெள்ளி வீதியார் பாடல்

48. வசையொழிய .......... எனத் தொடங்கும் குறள்.

.................

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593